கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 14
சித்திரை 15 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

## உலக கத்தோலிக்கரின் தொகை கூடுகின்றது குருமாரின் தொகை குறைகின்றது

வத்திக்கான் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி 1970-ம் ஆண்டில் அதன் முந்திய வருடத்திலும்பார்க்க 7,118,120 கூடிய கத்தோலிக்கர்கள் இருக்கின்றனர். ஆனால், மேற்றிராசனங்களும், விசாரணைப் பங்குகளும் குருமார் கன்னியர்கள் தொகையில் முன்னிலும குறைவாகவே கணிக்கப்பட்டிருக்கின்றது. குருமாராகுவதற்குத் தேவஅழைத்தல் கூடவேண்டும் என்பதற்காகச் சித்திரைமாதத்தில் விசேஷ செபங்களைப் பாப்பரசர் விரும்புகின்றார்.

# புனித தோமையார் வேதசாட்சியான பத்தொன்பதாம் நூற்றாண்டு விழா

பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவரும் இந்தியாவில் கிறிஸ்துநாதரை அறியப்படுத்தி வேதசாட்சியாக மரித்தவருமான புனிததோமையாரின் 19-ம் நூற்றாண்டு விழா நிகழும் சித்திரை 14-ம், 15-ம், 16-ம் தேதிகளில் சென்னைமா நகரில் மிகசிறப்பாக கொண்டாடப்படுகிறது. இலங்கை உட்பட பலதேசங்களிலுமிருந்து பெருந்திரளான குருமார், துறவிகள், கன்னியர், பொது நிலையினர் விழாக் கொண்டாட்டங்களில் பங்குபற்றுகின்றனர். கூட்டுத்திருப்பலிகள், கலை நிகழ்ச்சிகள் கருத்தரங்குகள், பொதுக் கூட்டங்கள், தேசியத்திருயாத்திரை, நற்கருணைப்பவனி ஆதியன கொண்டாட்டங்களில் இடம்பெறுகின்றன. இதற்கான சகல விதமான ஆயத்தங்கள் பல மாதங்களாக நடைபெற்று வந்துள்ளன.

### விழாவின் மையக் கருத்து

"பெற்ற திருவாழ்வைப் பிறருடன் பகிர்வோம்" என்பது இவ்விழாவின் மையக் கருத்தாக அமைந்துள்ளது. புனித தோமையாரை இந்தியாவுக்கனுப்பிய தேவனுக்கு நன்றி செலுத்துவதும், அப்போஸ்தலர் வழியாய் நாம் பெற்ற நற்செய்தியையும் அருள்வாழ்வையும் பிறரோடு பகிர்ந்துகொள்ள நம்மை ஊக்குவிப்பதும் இவ்விழாவின் முக்கிய நோக்கங்களாகும்.

### உத்தானத்துக்குச் சிறந்த சாட்சி

இந்தியாவிலுள்ள தமிழக ஆயர்கள் இவ்விழாவையிட்டு விடுத்த கூட்டுநிருபத்தில் பின்வருமாறு கூறியுள்ளனர்:

"இந்நூற்றாண்டு விழாவை அதிக பக்தி ஆர்வத்துடன் சிறப்பிப்பது மிகவும் பொருத்தமானது. புனித தோமை அப்போஸ்தலர் நமது தமிழ் நாட்டில் சிறப்பாக உழைத்துள்ளார் என்பதை நினைக்கும்போது, தமிழக மக்களாகிய நாம் மற்றவர்களைவிடப் பெரிதும் அவருக்குக் கடமைப்பட்டிருப்பதை உணர்கின்றோம். ஆகவே, கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நாம் பொறுப்பை நன்கு உணர்ந்துகொண்டு, நாமும் மீட்பரின் உயிர்த்தெழுதலுக்குச் சிறந்த சாட்சிகளாகி, அவ் "உயிர்த்தெழுதலின் வல்லமையைத் துய்த்துணர்ந்து" (பிலிப் 3 : 10) நம்மைக் கடவுளுக்காகத் தியாகம் செய்ய நம் அப்போஸ்தலரிடமிருந்து கற்றுக்கொள்ள இவ்விழா அரியதொரு வாய்ப்பாக அமைவதாக.

நமதப்போஸ்தலர் நமக்குக் கற்பிப்பது மீட்பரின் உயிர்த்தெழுதலில் உறுதியான விசுவாசமாகும். ஆண்டவர் உயிர்த்தெழுந்ததைத் தொடக்கத்தில் அவர் ஏற்கவில்லை. இன்றைய பகுத்தறிவு வாதிகள் செய்வது போல், தானே நேரில் கண்ணால் பார்க்கவேண்டும், கையால் தொட்டுப் பார்க்க வேண்டும் என்றெல்லாம் பிடிவாதமாகக் கூறினர். "மற்றச் சீடர்கள் அவரிடம் 'ஆண்டவரைக் கண்டோம்' என்றதற்கு அவர்: 'அவருடைய கைகளில் ஆணியால் உண்டான தழும்பைப் பார்த்து, ஆணிகள் இருந்த இடத்தில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## ஸ்பெயின் தேச ஆயர் காட்டும் முன்னேற்றப் பாதை

ஒரு வாரகாலமாக ஸ்பெயின்தேச ஆயர்சங்கம் நடாத்திய ஆலோசனைகளின் பின், தமது நாட்டில் சமூக, அரசியற் துறைகளிலே முன்னேற்றபாதையைக் கடைப்பிடிப்பதென ஏகமனமாக முடிவு செய்திருக்கின்றனர். அரசாங்கத்துக்கு அடிவருடிகளாக அத்தேச திருச்சபையிருப்பதை அவர்கள் விரும்பவில்லை. சுயாதீனமுள்ள திருச்சபையை அத்தேசத்தில் நிலைநாட்டுவதே அவர்களது பிரதானமான நோக்கமாகும். மக்கள் ஆன்மபலன்களை அடைவதற்கு லௌகீக தொடர்புகள் அத்தியாவசியமாயிருப்பதால் திருச்சபை லௌகீக முன்னேற்ற கருமங்களை தமது சேவைக்கு அப்பாற்பட்டதெனக் கொள்ள முடியாதெனவும், அரசாங்கத்துக்கு துணைசெய்யக் கூடிய கருமங்கள் யாவற்றிலும் முழு ஊக்கத்துடன் ஒத்துழைக்கவும், அரசாங்கத்துக்கும் நீதியான சட்டங்களுக்கும் அமைந்து நடக்க திருச்சபை கடமைப்பட்டிருக்கின்றது எனவும் அறிக்கை கூறுகின்றது.

## வங்காளதேச கத். ஆயரின் பேருதவி

வங்காள தேசத்தில் கத்தோலிக்கர் அத்தேச மக்களின் தொகையில் மிகச்சிறுபான்மையினராயினும் அங்குள்ள 4 மேற்றிராசனங்கள் ஒவ்வொன்றும் 7,500,000 அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிசெய்து ஒவ்வொரு குடும்பத்துக்கு 150 டொலர் வீதத்தில் 50,000 குடும்பங்களின் புனருத்தாரணத்துக்கு உதவ வாக்குப்பண்ணியிருப்பதாக, நிதிதிரட்டும் வேலையில் இத்தாலி தேசத்துக்கு அண்மையில் விஜயம் செய்திருக்கும் டிறுப்பூர் பிரிவு மேற்றிராணியாராகிய மைக்கல் றெசாறியோ அடிகளார் சென்றவாரம் அவர் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் கூறியிருக்கிறார். மேற்றிராணிமார் வாக்குப்பண்ணியிருக்கும் இத்தொகையில் குறிக்கப்பட்டத்தக்களவு பணம் அவர்களது பிரிவிலோ அவர்களது கையிலோ தற்போது இல்லாதிருப்பினும் உலக கிறீஸ்தவர்கள் கொடுத்து உதவுவார்கள் என்னும் திடமான நம்பிக்கை அவர்களுக்கு உண்டு என்றும் அடிகளார் கூறியருளினார்.

## வத்திக்கான் "பென்சன்" சம்பளம்

வத்திக்கானில் வேலைசெய்வோர் 65 வயதானவுடன் வேலையிலிருந்து இளைப்பாறலாம். அவர்கள் 20 வருட சேவை புரிந்தவராயின் இறுதி மாதச்சம்பளத்தில் 80 சதவீதம் பென்ஷன் சம்பளமாகப் பெற்றுக்கொள்வர். இதைவிட முதல்மாத பென்ஷனுடன், ரொக்கப் பணமும் பெற்றுக்கொள்வர். இந்த ரொக்கப்பணம் அவர்களுடைய பென்ஷன் பணத்தை, அவர்கள் சேவை செய்த வருடத் தொகையினால் பெருக்க வரும் தொகையாகும். இவ்வாறான கூடிய பென்ஷன் சம்பளம் உலகத்தில் வேறு இடங்களில் கொடுக்கப்படுவதில்லை.

● எலிசபேத் மகாராணியும், பிலிப் கோமகனும் திருமணஞ் செய்துகொண்ட 25ஆம் வருட வெள்ளி யூபிலி விழா இவ்வருடம் கார்த்திகை மாதம் 20 ஆம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. இது சம்பந்தமாகப் பிரித்தானிய நிறுவனம் ஒன்று 22கறட் தங்கத்திலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும் ஞாபகபதக்கங்கள் அடித்து வெளியிடவிருக்கின்றது. இவைகள் வருகிற ஆவணி மாதம் முதலாந் [illegible]

## சினொட் நிர்வாகக்குழு செய்துவரும் வேலை

சென்றவருடம் வத்திக்கானில் நடந்த ஆயர் சினொட் கூட்டங்கள் முடியுமுன் அதன் வேலையைத் தொடர்ந்து செய்யவேண்டிய நிர்வாக வேலைகளைக் கவனிக்க ஒரு காரியக்குழு நியமிக்கப்பட்டது. அக்குழு ஆலோசனைக்கு வந்துள்ள பல கருமங்களுள் பிரதானமானவை வருங்கால ஆயர் சினொட் இரு வருடங்களுக்கு ஒரு முறையல்லாது மூன்று வருடங்களுக்கு ஒருமுறை கூடுவதும், சினொட் கூட்டங்கள் திறமையாக நடக்க எடுக்கப்படவேண்டிய ஒழுங்குகளுமாம். சென்ற சினொட் முடிவுகளை நடைமுறையில் பயன்படுத்துவதற்கும் வழிவகைகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

## குருமாருக்கு உயர் தத்துவசாஸ்திர அறிவு அவசியம்

கத்தோலிக்க கல்வி விஷயங்களை வத்திக்கானில் பரிபாலிக்கும் சபையினர் அகில உலக மேற்றிராணிமாருக்கு அண்மையில் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் குருமாணவருக்கு இதுகாலவரையும் ஊட்டப்பட்ட தத்துவ சாஸ்திர அறிவின் உயர்தரத்தை எக் காரணங்களைக் கருதியும் குறைத்து விடப்படாதென விண்ணப்பித்திருக்கின்றனர். சமீபகாலத்தில் விஞ்ஞான சாஸ்திர அறிவில் கூடிய நாட்டம் செலுத்தப்பட்டு வருவதால் தத்துவசாஸ்திர கல்விக்குப் போதியளவு நேரம் கொடுக்கப்படாதுவருவதை வத்திக்கான் அதிகாரிகள் உணர்வுற்று இப்பிழையை நிவிர்த்தி செய்ய முன்வந்துள்ளனர். உயர் தத்துவசாஸ்திர அறிவை இன்றைய நிலையில் ஊட்டுவதில் என்ன கஷ்டங்கள் இருப்பினும் அவை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது அவர்களதுநோக்கமாகும்.

● மெர்சீட்ஸ் கம்பெனியார் பாப்பரசருக்கு நவீன வசதிகளுடன்கூடிய நவமான கார்ஒன்றை வெகுமதி செய்திருக்கின்றனர். இது அவருக்கென்றே பிரத்தியேகமாகச் செய்யப்பட்டது. இதன் விலை மூன்றுலட்சம் ரூபாவாகும். அவர் செபஞ்செய்தபடியே இந்தக்காரில் செல்லலாம்.

ஒவ்வோர் விசாரணைப்பங்கிலும்
## தர்மஸ்தானங்கள் நிறுவமுடியாதா?

கொழும்புமாநகரிலுள்ள மட்டக்குளி விசாரணைப் பங்கு இத் தீவின் மறு பங்குகளுக்கு தர்ம சேவையில் வழிகாட்டுகின்றது. சென்ற மூன்றுவருட காலமாக அப் பங்குக்கென ஒரு வயோதிபர் இல்லம் அப் பங்கிலுள்ள தர்ம முயற்சிகளினால் நடப்பிக்கப்பட்டுவருகின்றது. அப் பங்கிலுள்ள குருவானவர் வழிகாட்டியாக விளங்குகின்றார். வருடத்தில் ஒரு நாளுக்கு ஆகவேண்டிய உணவுப் பொருட்களைக் கொடுக்கசெல்வாக்குள்ள ஒரு குடும்பத்தினர் அல்லது பல குடும்பத்தினர் ஒன்றுசேர்ந்து முன்வருகின்றனர். வயோதிப இல்லம் நடைபெறுவதுபோலவே மறு தர்மசேவைகளும் இப்பங்கில் நடைபெற்று வருகின்றன. மட்டக்குளி காட்டும் நன்முன்மாதிரி விரைவில் மறு பங்குகளிலும் பரவுமென்ற நம்பிக்கைக்கு இடமுண்டு. இத்தகைய சேவைகளை கொட்டாஞ்சேனை விசாரணைப்பங்கிலும் [illegible] கண்டுகொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சத்தியவேத பாதுகாவலன்

## விசுவாசமும் அறிவும்

கத்தோலிக்க சமயத்தை சத்திய வேதம் என்றும் அழைக்கிறோம், அதாவது, அதன் போதனைகள் யாவும் உண்மையானவை; விசுவசிக்கப்பட வேண்டியவை, ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை; இக்காரணத்தாலேயே சத்திய வேதம் என்ற பெயர் ஏற்படலாயிற்று.

இவ்விதமாக கத்தோலிக்க சமயத்தில் விசுவாசம் இன்றியமையாததாக, எல்லாவற்றுக்கும் முதன்மையானதாக இருக்கும்போது ஒருவரது சுயபுத்தியும் அறிவும் சமயவாழ்வில் எவ்வாறு பயன்படுகின்றன? ஒரு காரியம் விசுவாச சத்தியமென்றால் அதற்குத் தக்க நியாயங்களைக் கண்டுபிடிப்பது இயலாதென்று மக்கள் நினைத்த காலமுமிருந்தது.

ஆனால், இன்று நிலைமை வேறு. ஒவ்வொரு உண்மையையும் பல கோணங்களிலிருந்து நிபுணர் ஆராய்ச்சி செய்கின்றனர். பலரும் தத்தம் கருத்துக்களை, சில சமயங்களில் தவறான கருத்துக்களைக் கூட வெளியிடுகின்றனர். இந்தக் கருத்துச் சுதந்திரம் விசுவாச வாழ்வுக்கு இடையூறாக அமைந்துவிடக்கூடும் எனப் பலர் அஞ்சினாலும் சிந்தனைகள் வளர்வதற்கு இது வழி செய்துள்ளது.

அறிஞர்கள் விஷயம் இவ்வாறிருக்க சாதாரண மக்கள் தம் புத்தியையும் அறிவையும் விசுவாசத்திற்குப் பயன்படுத்திக் கொள்வது எங்ஙனம்? "விசுவாசம் கேள்வியினாலேயே உண்டாகிறது" என்று வேதாகமம் கூறுகின்றது. அறிவும் அதிகாரமும் உள்ளவர்களின் விளக்கமான உரைகளைக் கேட்பதனால் எம விசுவாசம் வலுவடையும். இத்தகைய உரைகளைக் கேட்பதில் கரிசனை இல்லாதவர்கள், பிறர்; அதாவது அதிகாரமோ பயிற்சியோ இல்லாதவர்கள் கூறும் வார்த்தைகளைக் கேட்டு விசுவாசத்தில் தளர்ச்சி அடைகின்றனர். அவர்கள் மனதில் பற்பல சந்தேகங்கள் முளைக்கின்றன. எமக்கு விளங்காத காரியங்களைப் பற்றி சந்தேகங்கள் எழுவது இயற்கை. ஆனால், அச்சந்தேகங்களை உடனுக்குடன் தெளிவாக்கிக் கொள்வதுதான் அறிவுடைமையாகும். ஐயங்களை மனதிலேயே வைத்துக்கொண்டு வெளியிடத் தயங்குவதும், பிழையான ஆட்கள் தரும் விளக்கங்களை, அவர்கள் கூறும் தவறான கருத்துக்களை உண்மையென நம்பி தடுமாறுவதும் விசுவாசத்துக்கு ஆபத்தானது.

வேத நூல்களையும் வெளியீடுகளையும் வாசிப்பதும் ஒருவரது விசுவாசத்தை வளர்க்கவும் சந்தேகங்களை நீக்கவும் அவசியமாயிருக்கிறது. எமது விசுவாசம் குருட்டு விசுவாசமாயிராமல் அறிவில் ஊன்றியதாக இருந்தால்தான் அது உறுதியானதாக இருக்கும். முக்கியமாக வேதாகமத்தை அடிக்கடி வாசித்துவருவது விசுவாச வளர்ச்சிக்கு இன்றியமையாதது. விசுவாச மற்றவரும் பிறரும் எழுதியவற்றை ஆவலுடன் படிப்பவர்கள் விசுவாசத்தில் உறுதிப்பட்ட அறிஞர் எழுதியவற்றை படிப்பதில் அலட்சியமாக இருப்பது எவ்வளவு அறிவீனம்.

புத்தியுடைமையினாலேயே மனிதன் மனிதனாக இருக்கின்றான். விசுவாசம் அந்தப் புத்தியை அவமதிப்பதில்லை. அதையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. அதைக் கட்டியெழுப்புவது அறிவும் கேள்வியும, சிந்தனையுமாகும்.

## அயர்லாந்தில் நிலைமை சீரடைந்து வருகிறது

வடஅயர்லாந்தில் சிறுபான்மைத் தொகையினரான கத்தோலிக்கருக்குப் பெரும்பான்மையினராகிய புரொட்டஸ்தாந்தினருக்கும் இடையில் சென்ற இருவருடங்களாக நிலவிவந்த கலகநிலைமையைச் சீர்ப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கில பிரதமமந்திரி வட அயர்லாந்தின் ஆட்சியை நேரடியாக ஆங்கில அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்திருப்பதை நேயர்கள் அறிவர். இப்புதிய முறை புகுத்தப்பட்டதை புரொட்டஸ்தாந்தினர் பெரிதும் எதிர்த்தனராயினும், சென்ற இருவாரங்களாக நிலைமை சீரடைந்து வருகின்றது என்பதை மறுக்க முடியாது. ஆரம்பத்தில் புரொட்டஸ்தாந்தினரால் நடத்தப்பட்ட வேலை நிறுத்தங்கள் அப்பகுதியில் பொருளாதாரத்தை ஸ்தம்பிக்கப் பண்ணுமென எதிர்பார்த்த அளவுக்கு நிறைவேறவில்லை—அத்தோடு புரட்சிக்கார தென் அயர்லாந்து சைனியத்தினரும் ஓரளவு அமைதியாகவே இருக்கின்றனர். இங்கிலாந்திலும், அயர்லாந்திலும் பிரதமர் ஹீத் கையாண்டு வரும் முறைக்கு பெரும் ஆதரவு ஏற்பட்டிருக்கின்றது.

# உயிர்த்தெழுந்த திருநாளின் உன்னத நோக்கு

அடங்கிக் கிடந்த ஆலய மணிகள் ஆர்ப்பரித்து முழங்குகின்றன. அழுகைக்குரலெழுப்பிய திருச்சபை "அல்லேலூயா, அல்லேலூயா" எனும் ஆனந்தப் பாடலை இசைக்கின்றது. வெறுமையாய்க் கிடந்த பீடங்கள் வண்ண மலர்களால் அழகு பெறுகின்றன. இவையெல்லாம் எதற்காக? ஆம், இன்று உலகை உய்விக்க வந்த உத்தமர் யேசு உயிர்த்து விட்டார்; மகிழ்ச்சிப் பெருநாள். பெருநாள் என்றதும், புத்தாடை அணிவது, கோவிலுக்குப்போவது, பட்சணங்கள் உண்பது ஆகிய இவைதான் பெருநாளைக் கொண்டாடுவதற்கான சிறப்பம்சங்கள் என நம்மில் பலர் எண்ணுவதுண்டு; இது தவறு. எதற்காக இத்திருநாள் கொண்டாடப்படுகிறது! அதன் உட்கருத்தென்ன? என்பதைப் பற்றி நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துணர வேண்டும்.

அன்று மனுக்குலத்தின் முதல் மனிதன் கடவுளின் கட்டளையை மீறிப் பாவம் செய்தபடியால் அவன் கடவுளின் சாபத்துக்குள்ளானான். அவன் வழிவந்த அனைவரும் சாபத்துக்குள்ளானதோடன்றி சாவுக்கும் உள்ளாகினர்; ஏனெனில் பாவத்துக்குக் கூலி மரணமே. ஆனால் மனுக்குலம் பாவத்தால் கெட்டழிய இறைவன் விரும்பவில்லை. மனுக்குலத்தை மீட்பதற்காக, நம் பாவங்களையெல்லாம் அவர் தம்மேல் சுமத்தி, பாடுபட்டு, சிலுவை மரணத்தைத் தழுவிக்கொண்டார். எதற்காக அவர் இவ்வளவு வேதனைகளையும் தாங்கிக் கொண்டாரென்றால் அவர் நம்மீது கொண்ட அளவற்ற அன்புக்காகத்தான்.

யேசுநாதர் நமக்காகச் சொல்லிலடங்கா வேதனைகளை அனுபவித்து, மரித்து பின் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இதிலிருந்து நாம் உணருவதென்ன? துன்பத்தைப் பொறுமையோடு சகித்துக் கொண்டாலன்றி இன்பத்தை அடைய முடியாது. புயலுக்குப் பின் அமைதி இருளுக்குப்பின் ஜோதி என்பதுபோல துன்பத்திற்குப் பின்தான் இன்பம்; இதை நாம் நன்குணர வேண்டும்; "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய மிகுந்த பலனளிக்காது" என்ற யேசுவின் திருவாக்கை, அவரது மரணமும், உயிர்ப்புமே எமக்கு மெய்ப்படுத்திக் காட்டுகின்றன.

யேசுநாதர் மரணத்தினின்று உயிர்த்தது போல நாம் ஒவ்வொருவரும் பாவமெனும் மரணத்தினின்று உயிர்க்க வேண்டுமாயின் எமது பாவங்களையெல்லாம் இல்லாதொழித்து ஆத்துமத்திலுஞ் சரீரத்திலும் பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஆகவே, இத்தினத்தில் நாமெல்லோரும் பழையவற்றை மறந்து, அவைகளை வெறுத்து புதியவர்களாக புண்ணிய வழியில் வாழ உறுதி பூணுவோம்! இதுவே உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கு நாம் செய்யும் உன்னத மகிமையாகும்.

செல்வி பெற்றிமா ஜோஸப்,
விக்டோறியா—குருப்,
தெல்தெனிய.

## குருப்பட்டம்

அருள்திரு. அன்சல்ம் ஜீவரெட்ணம்
அருள்திரு. ஞானப்பிரகாசம்

ஆகிய இருவரும் யாழ். மறைவட்டத் துணை ஆயர் L. R. அன்ரனி ஆண்டகை அவர்களால் சித்திரைத் திங்கள் 20ஆம் நாள் பி. ப. 5 மணிக்கு கொழும்பு மட்டக்குளி 'டி மெசனட்' இல்லத்துச் சிற்றாலயத்தில் குருக்களாக அபிஷேகிக்கப்படுவார்கள்.

வண. அன்சல்ம் ஜீவரெட்ணம் சுவாமியார் தமது முதற் பூசையை வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் சித்திரைத் திங்கள் 24ஆம் நாள் பி. ப. 4-45 மணிக்கு நிறைவேற்றுவார்.

வண. ஞானப்பிரகாசம் சுவாமியார் தமது முதற் பூசையைக் காவட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் வைகாசித் திங்கள் 6ஆம் நாள் காலை 7 மணிக்கு நிறைவேற்றுவார்.

## கருத்தரங்கு

எதிர்வரும் 13-ம் திகதி அகில இலங்கைக் கத்தோலிக்க சங்கத்தின் சார்பில், கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் "இன்றைய பொருளாதார நெருக்கடிச் சூழலில் தொழிலாளர்" என்ற பொருள்பற்றிக் கருத்தரங்கு நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெற இருக்கும் இக்கருத்தரங்கில் தமிழ்ச் சொற்பொழிவாற்ற புலவர் [illegible] அரியநாயகம் அழைக்கப்பட்டுள்ளார்.

## பூசை வழிகாட்டி
### சித்திரை—1972.

16. ஞாயிறு: பாஸ்கா காலத்தில் 3-ம் ஞா. [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 2: 14a, 22—28
1இரா. 1: 17—21.
லூக். 24: 13—35.

17. திங்கள்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 6: 8—15
அரு. 6: 22—29

18. செவ்வாய்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 7: 51—8: 1
அரு 6: 30—35

19. புதன்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி. 8: 1—8
அரு. 6: 35—40.

20. வியாழன்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 8: 26—40
அரு. 6: 44—51

21. வெள்ளி: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 9: 1—20
அரு. 6: 52—59

22. சனி: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 9 31—42
அரு. 6: 60—69.

23. ஞாயிறு: பாஸ்கா காலத்தில் 4-ம் ஞா. [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 2 : 14a, 36—41
1இரா. 2: 20—25. அரு. 10: 1—10.

## கிறிஸ்தவ ஐக்கிய திருயாத்திரை

கிறிஸ்தவ ஐக்கிய கோஷ்டியின் 15 நாள் திருயாத்திரை ஒன்று இங்கிலாந்திலே லிவப்பூர் நகரிலிருந்து இம மாதம் 8ஆம் திகதி யன்று பரிசுத்த நாட்டுக்குப் புறப்பட்டது. இதிலே அங்கிளிக்கன்களும், கத்தோலிக்கரும், சுதந்திர கிறிஸ்தவ சபையினரும் கலந்து சென்றிருக்கிறார்கள். லிவப்பூர் நகர் அங்கிளிக்கன் ஆசனக்கோவில் தலைமைக்குருவாகும் கனம் எட்வாட் பறற்றே அவர்களும் அங்குள்ள கிறிஸ்துஇராசாவின் ஆசனக்கோவில்பங்குக்குருவான வண.தோமஸ் மைக்கென்ன சுவாமியாரும், மெதடிஸ்ற்மாநிலத்தின் தலைவரான கனம் றெஜிநோய் நிசான் அவர்களும் இந்தயாத்திரைக்குத் தலைமைவகுத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் நீயும் நடிக்கும் நாடகம்

## பிடிபட்ட படலம்

[முன் தொடர்ச்சி]

யூதர் கூட்டம் தோட்டத்தைக் கிட்டிவிட்டது. அதன் தலைவனான யூதாஸ் தனது கடைசி எச்சரிக்கைகளைக் கொடுக்கிறான். யேசுவின் சாதுரியங்களைச் சற்றேவிபரித்து தனது சேவையின் சிறப்புக்கு மெருகூட்டுகிறான். "அவருடைய சொந்த ஊரான நசரேத்திலே அவரை மலையினின்று விழுத்திக் கொல்ல முடிவு செய்தார்கள். பட்டப்பகலில பிடித்துக் கொண்டு போகும் போது இடையிலிருந்து நழுவிவிட்டார். எருசலேம் தேவாலயத்திலே எத்தனையோவிசை அவரைப் பிடிக்க எத்தனித்தார்கள். வேதபாரகரைப் பரிசேயரைக் குருக்களை மரியாதையின்றிப் பேசிப் பிழை பிடித்தார், கண்டித்தார். பிடிக்கப்போன சேவகர் முடியாது என்று திரும்பியது எல்லாருமறிந்தது. தந்திரியான ஏரோதரசனுக்குத் தானும் அவர் அஞ்சவில்லை. தனது வல்லமை கடவுளுக்குச் சமன் என்று சொல்லுவார். சகல உயிரின் மேல் முழுஅதிகாரம் உண்டு தனக்கென்பார். அப்படிப்பட்டவரைக் கிட்டிப் பிடிப்பது சாமானிய வேலையல்ல. அவரை ஆளடையாளம் காண்பதே கஷ்டம். அவருடைய முகசாடை கொண்ட அவருடைய சீடரும் உண்டு. ஒன்றுவிட்ட சகோதரரான ஒருவரைக் கொண்டு போனால் லாபமென்ன? எனவே, எனது அடையாளத்தைக் கவனிக்க வேண்டும். நான் போன உடனே அவருடைய கன்னத்திலே முத்தமிடுவேன். உடனே பிடித்துக் கவனமாகக் கட்டிக் காவலாய் கொண்டு போங்கள்" என்றான். இவ்வாறு ஒழுங்கு செய்து கொண்டு கூட்டம் தோட்டத்துள்ளே நுழைந்தது.

ஆட்களின் அரவமும் வெளிச்சங்களும் எட்டுச் சீடரின் நித்திரையைக் குழப்பிவிட்டது. துடித்துப் பதைத்து எழும்பி மற்றவர்களிலிருந்த இடத்துக்குப் பயந்தோடி வந்தார்கள். ஆபத்து வந்த போதெல்லாம் குருவிடம் ஓடுவது அவர்கள் பழக்கம். வேண்டிய உதவி பெறுவது அவர்கள் அனுபவம். கடலிலே புயலை அடக்கினார். வனாந்தரத்திலே அப்பம்பெருக்கினார். பேய்களை விரட்டினார். இந்தக் கொள்ளைக்கூட்டம் அவருக்கொரு சரக்கா?

சீடர்களின் நித்திரை கலைந்துவிட்டது. யேசுவின் முகத்திலே களையும், இரத்தக்கறையும் வேர்வையும் நிலவு வெளிச்சத்திலே காணக்கூடியதாக இருந்தது. யேசு கூட்டத்தை நோக்கி முன்நடந்தார். பதினொருவரும் தொடர்ந்தனர். எதிரேவந்தவர்களை நோக்கி உரத்த குரலில் "யாரைத் தேடுகிறீர்கள்" (அரு. 18 4) என்றார்.

முன்னொருநாள் அருளப்பரின் இரு சீடர் யேசுவின் பின் வந்தார்கள். அவர்களை "என்னவேண்டும்" (அரு. 1. 38) என்று கேட்டார். யேசுவின் இடத்தைக் கேட்டார்கள். "வந்து பாருங்கள்" என்றார். அவர்கள் பிறகு வேறு சீடர்களையும அழைத்துவந்து அவருடைய போதகத்தைக் கேட்டார்கள். இருளில் இருக்கும் மனிதருக்கு ஒளியாகவே மீட்பர் வந்தார். (அரு. 1. 9.—8. 12) களைத்தவர்கட்கு ஆறுதல் கொடுக்க வந்தார். (மத். 11. 28.) தாகமாயிருப்பவருக்கு வற்றாத நீர் கொடுக்க வந்தார் (அரு. 7. 37—4. 14.) தம்மிடம் வரும் எல்லாரையும் ஏற்று வினவுவது யேசுவின் பண்பு. கொடுக்கப் படிப்பிக்க வந்தவர் கேட்டு விரும்பியவர்களுக்கே கொடுத்தார். இப்பொழுதும் அதே வினா. என்ன விரும்புகிறார்கள்? அதுதான் பிரதானம்.

இன்று பகலிலல்ல இரவில், வாழ்வு தேடி அல்ல அதை அழிக்க, நண்பர் அல்ல எதிரிகளின் ஏவலாட்கள் வந்திருக்கிறார்கள். இந்தச் சனக்கும்பலுக்குச் சுயசித்தமே கிடையாது. காற்றோடு சுழலும் சருகு, புழுதிபோலப் புரளும் கூட்டம். திட்டர் காட்டும் அட்டூழியங்களைக் கைகூசாது செய்யும் பேதைகள். மனித சரிதையில் எங்கும் இவர்களைக் காணலாம். இவர்களிற் பலர் யேசுவைக் கண்டும் கேட்டுமிருக்கிறார்கள். அவரை மெச்சியுமிருக்கிறார்கள். இப்போது சங்கத்தாரின் பொம்மைகளாகவே வந்திருக்கிறார்கள், யேசுவைப் பிடித்துக் கொண்டு போக. எனவே, கேட்டகேள்விக்கு "யேசுநசரேனுவை" என்று விடை கொடுத்தார்கள். அந்தப் பெயரின் பொருளை விளங்காது குருடராகக் குளறினார்கள். யேசு மறுமொழியாக "நான் தான் அவர்" (அரு. 18. 5) என்றார்.

எரியும் புதரிலே தோன்றிய "யாவே" "இருக்கிறவர் நாமே" (யாத். 3. 14) என்று மோயீசனுக்கு அறிவித்தார். அவர் போய் இஸ்ராயேல் சனத்துக்கும், பார்வோனுக்கும் அதைச் சொன்னார். இங்கும் அவரே இருக்கிறார் என்று யூதாசுக்கு எச்சரிக்கை அளிக்கிறார். "அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசும் அவர்களோடிருந்தான் (அரு. 18. 5) யாக்கோப்பின் கிணற்றருகிலே சமாரிய பெண்ணுக்குத் தான் யாரென்று சொன்னதுபோல (அரு. 4. 26.) சுகமடைந்த பிறவிக் குருடனுக்கு அறிவித்ததுபோல (அரு. 10. 37) யூதாசுக்கும் விசுவசிக்க வசதிகொடுக்கிறார். ஆனால், அவன் அதைக் கவனிக்கவில்லை; அவன் மனம் கடினமாகி விட்டது.

இந்தப் பெயரைக் கேட்ட சனக்கூட்டம் "பின்வாங்கித் தரையில் விழுந்தனர். (அரு. 18. 6) உச்சரிக்க முடியாத "யாவே"யின் பெயரைக் கேட்டு விட்டார்களல்லவா? மூன்று சீடர்கள் உயர்ந்த "கேர்மன்" மலைமேல் அவர் மகிமையைக் கண்டதும் வானின்று ஒலியைக் கேட்டதும் பயந்து விழுந்தார்கள். மோசேசுடீ எலியாசும் அவருக்குச் சாட்சி பகர்ந்தார்கள் (மத். 17, 2—6). கிறிஸ்துவின் மகிமைக் கீதமொன்றைச் சின்னப்பரின் நிருபத்திலே காண்கிறோம் (பிலிப். 2. 6—11) விசுவாசமில்லாதவர்களுக்குக் கிறிஸ்து வீழ்ச்சிக்கே காரணமாகிறார். விசுவசிக்க விருப்பமில்லாதவர்களைக் கடவுளே திருப்பமாட்டார். யேசு சேவகர்களை வீழ்த்தியது அழிக்கவல்ல எச்சரிக்கவே. அவர்கள் எதிர்பார்த்தபடி, நடக்கவில்லை. அதிகாரிகளின் படைபலத்தாலோ, துரோகியின் தந்திரத்தாலோ யேசுவைப் பிடிக்க முடியாது. தானே பிதாவின் விருப்பத்தைச் செய்யத் தன்னைக் கையளிக்கிறேன் என்று காட்டிவைக்கலானார். மனிதர் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றும் உபகரணங்கள் என்பதை உணர வைத்தார். வெற்றி தேடி ஓடிவந்த கெற்சிதமெல்லாம் போய் ஏதுசெய்வதென்றறியாது நின்றார்கள் சேவகர்.

மீளவும் யேசு "யாரைத் தேடிவந்தீர்கள்" என்று வினவினார். மீட்பரைத் தேடுவோர் விழமாட்டார்கள், அறியாது உங்கள் நடுவரையே தேடுகிறீர்கள். பிழையை உணர்ந்து மனம் மாறித் திருந்த இன்னும் சமயம் உண்டு. ஊதாரிமனம் திரும்பிப் பிதாவிடம் மீள வழி திறந்து விடுகிறார். ஆனால், அவர் சுயாதீனத்தைத் தொடமாட்டார். ஏனெனில், கடவுள் அடிமைகளை விரும்பவில்லை, பிள்ளைமனம் உள்ளவர்களையே தேடுகின்றார். கடவுள் விருப்பைத் தேடாமல் தங்கள் விருப்பிலே மூர்க்கமாய் நிற்கிறவர்களை, பகுத்தறிவைப் பாவியாதவர்களை அவர்கள் மதிகேட்டிலே விட்டுவிடுகிறார். வந்தது அதே விடை.

அப்படியாயின், மீட்பரையல்ல கைதியையே தேடுகிறீர்களாயின் "இவர்களைப் போக விடுங்கள்" (அரு. 18. 8) என்றார். நீங்கள் உங்கள் அழிவுக்கு என்னை அளிக்கத் தேடுகிறீர்கள். பிதாவின் ஒழுங்கு அதனால் நிறைவேறுகிறது. ஆனால், உங்கள் குற்றம் குறைகிறதில்லை. என்னுடையவர்கள் சேமமாக இருக்க வேண்டும் (அரு. 17. 12). முன்னர் பிதாவைச் செபித்தபடியே இங்கு எதிரிகளுக்குக் கட்டளை கொடுக்கிறார். அவருடைய அதிகாரத்துக்கு இயற்கையும், அலையும் அமைந்ததுபோல் இவர்களும் அமைகிறார்கள்.

இந்த இரு வார்த்தைகளாலும் யேசு தாம் இரட்சகர் என்று காட்டுகிறார். முதல் யூதாசையும் சேவகரையும் கேட்டில் நின்று காப்பாற்ற வசதி. அத்தி தமது சீடரைக் காப்பாற்ற வசதி. தன்னை மறந்து மற்றவர்களையே எண்ணும் பண்பு. ஆனால், பேதை மனிதர் கடவுளின் கருணையைத் தள்ளிவிடுகிறார்கள் அலலது எட்ட நின்று தொட்டுப் பார்க்கிறார்கள். உள்ளே சென்று அள்ளி உண்பவர் எத்தனை பேர்?

மதிகெட்ட மனிதரின் மாதிரிக்குதாரணம் யூதாஸ். அவனுடைய பிரயாசையாற் பயனேதுமில்லை. பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் பார்க்கப் பேதை அவனுக்குக் கண்ணில்லை. "காசாசை என்றாற் பணம் பெற்றுக் கொண்டாயே, உன்னைக் காக்க உன்குருமுன் வருகிறார். தன்னையே கையளிக்கிறார். உன்சதியை உன் தோழர்கள் இன்னும் உணரவில்லை, உன்குருவும் உன்னை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறார். அவருடைய சொல்லையும் செயலையும் புரிய உன்னால் முடியவில்லையா? பொறுத்தலைப் பெற உனக்கு விருப்பமில்லையா? உனது சாதுரியம் உன்னைச் சாத்தானுக்கு அடிமையாக்கிப் போட்டது! இன்று கிறிஸ்துவுக்குப் பாடம் கற்பிக்கவா புறப்பட்டாய். உன்னையேன் அனுப்புகிறாய். உலக அரசிலே பேரும் பணமும் விரும்பினாய். உனது தோழர்களும் அவ்விதமே போட்டியிட்டார்கள். ஆனால், நீ உன் குருவை மரியாதை பண்ணவில்லை; அவரை உனது கைப் பொம்மையாக்க விரும்பினாய். எதிரிகளிடம் கொடுத்தால் கெதிப்பண்ணி யூதஅரசை நிறுவுவார் என்று எண்ணினாயா? அல்லது உனக்கு முதலிடம் தராதது பற்றி வன்மம் சாதிக்க நினைத்தாயா? ஆனால், கிறிஸ்துவை நீ விளங்கவில்லை. இதிலே நீ தனியனல்ல, அதிகமான மனிதர் உன்னைப் போலவே நடக்கிறார்கள்." கிறிஸ்துவின் சீடராகச் சாதுரியம் போதாது; நேர்மை பிரதானம். அவரை ஏற்கவேண்டும் (விசுவாசம்); உன்னைக் கொடுக்க வேண்டும் (நேசம்). யூதாஸ் எல்லாருக்கும் ஒரு பொல்லாத எச்சரிக்கை.

(தொடரும்)

---

✠

### சிஸ்ரர் மேரி பெனிக்னு

இறைவனடி எய்திய

### 1ஆம் வருட நினைவு

18-4-72

"அக்கா உனைப்பிரிந்து
ஆண்டொன்று ஆயிற்றே
எப்போ உன்வதனம்
இனி நாங்கள் காண்போமோ
அன்பர் வான்வீட்டின்
இன்பம் பெற்றாயோ
அப்பா அம்மாவை
அங்கு நீ கண்டாயோ
இப்பூவில் வாழும் தம்பி
குடும்பம் தங்கை சிற்றன்னை
தப்பாதுனை நினைந்து
தவிக்கின்றோம் பாராயோ."

முடிவில்லா ஒளி இவருக்குப் பிரகாசிக்கக்கடவது.

அனைவரினதும் மன்றாட்டை வேண்டிநிற்கும்

தம்பி, மைத்துனி, மருமக்கள்
அம்பலப்புலம்,
ஊர்காவற்றுறை.

சிஸ். மேரி வலன்ரைன்
சிஸ். மேரி டொறுத்தி
திருக்குடும்பக்
கன்னியர் மடம்,
மயிலிட்டி.

---

✠

### 14-ம் வருட மரண ஞாபகம்

### மேரி ஞானமணி அந்தோனிமுத்து

"சீவியத்தில் நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்."

1971ஆம் ஆண்டு சித்திரை மாதம் 24ஆம் திகதி தேவன் தம்முடன் அழைத்துக்கொண்ட அவரது அடியாளாகிய மேரி ஞானமணி என்பவளை நினைவு கூருவோமாக. இவவுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக இம் மாதம் 14ஆம் திகதி வல்வை புனித செபஸ்தியார் ஆலயத்தில் துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் அனைவரையும் இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளத் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

ஆண்டவரே உமது அடியாளாகிய மேரி ஞானமணியின் மேல் நித்திய ஒளி ஒளிர்வதாக — சமாதானத்தில் இளைப்பாறுவாளாக.

பிரிவினால் துயருறும்,
சூ. தொ. அந்தோனிமுத்து
தங்கத்துரை குடும்பம்
வல்வெட்டித்துறை.

---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

### புனிததோமையார்

டாலொழிய விசுவசிக்க மாட்டேன்' என்றார்" (அரு. 20: 25). எட்டாம்நாள் நேரில் கண்டதும் உடனே, வேறு யாரும் அதுவரை காட்டியிராத விசுவாசத்தை வெளிப்படுத்தினார். அவரது தெய்வீகத்தை மறைத்துக் கொண்டிருந்த மனித உடலை ஊடுருவி, தெய்வீகத்தின் மாட்சியைக் கண்டவர்போல், "என் ஆண்டவரே, என் கடவுளே! என்று, கடவுளும் மனிதனுமான அவருக்குத் தன்னை ஒப்படைத்தார். எதைக்குறித்து முன்பு ஐயத்தை வெளிப்படுத்தியிருந்தாரோ, அதைப்பற்றி (அதாவது ஆண்டவரது உயிர்த்தெழுதலைப்பற்றி) இப்போது உறுதியான விசுவாச முயற்சி செய்கிறார். அதுமட்டுமல்ல, 'இனி நான் உம் அடிமை' நீர் என் ஆண்டவர்; இனி நான் உம் படைப்பு, நீர் என் கடவுள், ஆகவே என்னை இனி உம்க்கு அர்ப்பணித்து விடுகிறேன், நீர் என்னை ஏற்று உமக்கு முற்றிலும் உகந்த உரிமைப் பொருளாக்கிக் கொள்ளும்" என்ற முறையில் அமைந்தது அவ்விசுவாச அறிக்கை. விசுவாசம் என்ற சொல்லுக்கு இதுவே பொருள். நம்மை முழுவதும் இறைவன் கையில் ஒப்படைத்து, அவர் தம் திருவுளம் போல நம்மை நடத்தவிட்டுவிடுவதே உண்மையான விசுவாசமாகும். இத்தகைய விசுவாசத்தையே புனிததோமையார் இந்நேரத்தில் காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு கற்பனைச் சித்திரம்:

— ஜி. ஏ. பிள்ளை

# "சுவர்க்க வாசலில் சுவக்கீம்"

அன்று மந்தை வெளிக்கிராமம் கண்ணீரும கம்பலையுமாகக் காட்சியளித்தது. காரணம் அக்கிராமத்தின் மாதாகோவில் மூப்பர் சுவக்கிமே இறந்துவிட்டார். அது யார் சுவக்கிம் என்று நீங்கள் முணுமுணுப்பது எனக்குக் கேட்கின்றது. சுவக்கிமைத தெரியாதா? உங்கட்கு; சரியாய்ப் போச்சு. அப்போ நீங்கள் ஒரு கிணற்றுத் தவளைதான். நாட்டுவளப்பம் தெரியாத அப்பாவிகள்.

சுவக்கிம் ஒரு பெரிய மனுஷர். நாவசைந்தால் நாடசையும் என்பார்களே அப்படிப் பெரிய புள்ளிகளில் ஒன்று. அவர் தீர்த்துவைக்காத பிரச்சினைகள் இல்லை. காணாத கட்டளைக்குருக்கள் இல்லை. கடந்த மூன்று தலைமுறைகளாக அவரது குடும்பமே கோவில் மூப்பர். புனித பேதுருவுக்குப் பிறகு தனதுபொறுப்பில்தான் கிறிஸ்நாதர் திருச்சபையை ஒப்படைத்துள்ளார் என்பது அவரது எண்ணம். அவரது பேச்சும் அதே தோரணையில்தான் இருக்கும். அதுசரி, எண்ணம் பேச்சு எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். செயல் எப்படி என்றுதானே கேட்கிறீர்கள். இந்த நாட்களில் யாரையா செயலைக் கவனிப்பது. "படிப்பது திருவாசகம்; இடிப்பது சிவன்கோவில்" தானே.

மந்தை வெளிக்கிராமம் எப்படியாவது போகட்டும். ஆனால் அன்று மோட்சவீட்டின் வாசலிலும் சுறிது சலசலப்புக் காணப்பட்டது. பேதுருவானவர் சற்று முன்னதாகவே சுவர்க்க வீட்டு வாசலுக்கு வந்துவிட்டார். கொத்துச்சாவி அவரது கையில் தொங்கியது. "ஐயோ! எனக்கு அந்த மனிதனை — கிறீஸ்துவை — தெரியாது" என்று சொல்லிக்கொண்டு தொடைநடுங்க ஓடினாரே அந்தப் பேதுருவானவரைக் காணப்படவில்லை. முகத்தில் சற்று ஸ்திரத்தன்மை விளங்கியது. தேவ கணங்களும், புனிதர்களும் அப்படியும் இப்படியும் போய்க்கொண்டிருந்தார்கள். காதொடு காதுவைத்தாற்போல் எதையோ பேசிக்கொண்டார்கள். சூசகம் அவ்வளவு நன்றாயில்லை. நான் பத்திரிகை நிருபன் என்றவகையில் சற்றுத் துணிவுடன் ஒதுங்கி நின்றுகொண்டேன்.

சுவக்கிம் பேதுருவானவர் முன் நின்றுகொண்டிருந்தார். "நியாயத் தீர்ப்பு"க்காகத்தான். மோட்சவாசல் திறவுகோல்தான் பேதுருவானவரிடம் கொடுபட்டாயிற்றே. இதற்கிடையில் பேதுருவானவர் என்னைக் கண்டுவிட்டார். நீ யார்? எப்படி இங்கே வந்தாய் என்றார். நான் ஒரு பத்திரிகை நிருபன. சும்மா இப்படி இங்கே ஒரு சுற்றுச் சுற்றிப் போகலாமென உத்தேசம் என்றேன். இங்கே வெளியாட்களுக்கு அனுமதியில்லை என்பது உனக்குத் தெரியாதா? என்று ஏக வசனத்தில் கேட்டார் பேதுருவானவர். தெரியும்; ஆனால், சுவக்கிம் பெரிய மனிதராயிற்றே என்று இழுத்தேன். விஷயம் அந்த மட்டோடு நின்றுவிட்டது. எனக்குப் பெரிய ஆறுதல்.

பேதுருவானவர் நேரே குறுக்கு விசாரணையில் இறங்கிவிட்டார். "மோட்ச சம்பாவனைக்கு உமக்குள்ள தகுதிகள் என்னவென்ற பூர்வபீடிகையோடு விசாரணை தொடங்கியது. "நான் வேதக்காரன்" இது சுவக்கினின் பதில். பேதுருவானவருக்கு விஷயம்விளங்கிவிட்டது. சுவக்கிம கிறிஸ்துவில் திருமுழுக்குப் பெற்றவர். அந்த ஒரு தகுதி போதாது. வேறேதாவது உண்டா என்றார் பேதுருவானவர். நான் மந்தைவெளிக்கிராமக்கோவில் மூப்பர். மூன்று வலைமுறைகளாக எங்கள் குடும்பத்துக்கே மூப்பர்வேலை. கோவில் மூன்பாகவுள்ள மணிகோபுரம் கட்டியது எனது பேரன். கலவறைச் சுரூபம் வெட்டிவைத்தது எங்கள் பாட்டன். இதைக் கூறும்போது சுவக்கினின் முகத்தில் பெருமிதம் தவழ்ந்தது. ஆனால் பேதுருவானவருக்குக் கொஞ்சம் சிரிப்பு வந்தது. இவையெல்லாம் மோட்ச இராட்சியத்துள் பிரவேசிக்கப் போதுமான தகுதிகள் இல்லை என்றார் பீற்றர். இப்போதுதான் சுவக்கினுக்குச் சிறிது தடுமாற்றம் ஏற்பட்டது. பேதுருவானவர் இப்படிக் கடுமையான ஆள்என்று சுவக்கிம் எண்ணவில்லை. கோவிலில் எத்தனையோ 'பேதுருவானவர்'களைக் கண்டவர் மூப்பர். தூக்கிவைத்த இடத்தில் கப்சிப்என்று பேசாமல் இருந்தவர்கள் இங்கு என்னடாஎன்றால் கை கொஞ்சம் ஓங்கிநிற்கிறது. கருடனைக் கண்டால் பாம்புக்குச் சிம்ம சொப்பனம். ஆனால் சிவமெருமானுடைய கழுத்தில் தொங்கிய பாம்பு கருடா சுகமா என்று கேட்டதாம். எல்லாம் இருக்கும் இடவிசேஷத்தைப் பொறுத்தது.

செபமாலை ஓதினாயா? ஞாயிறு பூசைகண்டாயா? பக்திக் கூட்டங்கள் எதிலாவது சேர்ந்திருந்தாயா? இப்படியான கேள்விகளைத்தான் சுவக்கிம் எதிர்பார்த்திருந்தார், ஆனால் இங்கே பேதுருவானவர் ஒரு சட்ட நிபுணனைப் போல் நடந்துகொண்டார். பெலவீனமானபக்கம் தேடித்தான் கேள்விகளைப் போட்டார்.

சுவக்கிம் இப்போது சற்றுப் பெரிய அஸ்திரமாக ஒன்றைப் பிரயோகிக்க எண்ணினார். எனது சகோதரியுடைய மகன் ஒரு குரு. பெயர் அந்தோனி சாமி என்றார் சுவக்கிம். அதெல்லாம் இருக்கட்டும். பத்துக் கற்பனைகள், திருச்சபைக் கட்டளைகள் நடைமுறை எப்படி. இது பேதுருவானவரின் கேள்வி. அவற்றையெல்லாம் கோவிற் கிறிஸ்தவர்கள் கண்டிப்பாக அனுசரிக்க, சுவாமிமாரோடு சேர்ந்து நானும் பாடுபட்டிருக்கின்றேன். கண்டிப்பாகஎன்றஇடத்தில் சற்று அழுத்தம் கொடுத்துச் சொன்னார் சுவக்கிம். சங்கீத வித்துவான்கள் கழகத்தில் அழுத்தம் கொடுப்பதுபோல.

எல்லாம் சரி, உமது பெரிய நாற்சார்வீட்டின் பின்புறமாக ஒரு கொண்டிக்கிழவி இருந்தாளே அவளை உமக்குத் தெரியுமா? அவளுக்கு ஏதாவது உதவிகிதவி செய்த ஞாபகம் உண்டா என்றார் பேதுருவானவர். லூசியாக் கிழவியையா கேட்கிறீர்கள். அவளை எனக்குத் தெரியும். தெருக்கூட்டி செவிட்டு அந்தோனியின் தாய். ஆனால்......, 'என்ன ஆனல்' இடைமறித்தார் பேதுருவானவர். அவள்மெத்த எளியகுடும்பத்தைச் சேர்ந்தவள். எங்கள் அந்தஸ்துக்கும் அவளுக்கும் என்று இழுத்தார் சுவக்கிம். "வெகுதூரம்" என்று முடித்தார் பேதுருவானவர்.

சரி, சின்னச்சிப்பிள்ளையைத் தெரியுமா உமக்கு? "ஆம், அவள் ஒரு விதவைப்பெண். கொஞ்சம் கட்டுமஸ்தான உடம்பு. இடைசுகம் அந்தப்பக்கமும் போவது ... நெடுநாளைய பாந்தம்"மென்று விழுங்கினார் சுவக்கிம். பேதுருவானவருடைய முகத்தில அதிருப்தியின்சாயை படர்ந்தது. 'கேஸ்' தோற்று விட்டதுபோல் எனக்குப்பட்டது. "அடுத்தது காட்டும் பளிங்கு. நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்."

பேதுருவானவர் மத்தேயு நற்செய்தியில் இருந்து கீழ் வரும் வாசகங்களைவாசித்தார்.

"பசியாய் இருந்தேன் நீங்கள் எனக்குப் போசனம் கொடுக்கவில்லை, தாகமாய் இருந்தேன் நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை. அந்நியனாய் இருந்தேன். நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை"... வாசகம் தொடர்ந்தது.

இப்போது சுவக்கினின்முகம் வெளிறத் தொடங்கியது. கண்கள் இருண்டன. மனம் பதைபதைத்தது. காற்றுள்ளபோதே தூற்றத் தவறிவிட்டார் சுவக்கிம்.

ஏழைகள் வடிவிலும், விதவைகள் உருவிலும், பிணியாளர் நிலையிலும் கிறீஸ்துநாதர் சுவக்கிமிடம் பலமுறை வந்திருக்கின்றார். அப்போதெல்லாம் சுவக்கிம் அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. "மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு எதைச் செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள்" என்ற கிறிஸ்துவின்வாக்கு இப்போதுதான் சுவக்கிமுக்கு நன்கு விளங்கியது. எனினும் என்ன செய்வது. காலம் கைநழுவிவிட்டது. இரக்கத்தின் காலத்தைச் சுவக்கிம் தவற விட்டுவிட்டார். இது நீதியின்காலம்.

மோட்சவாசல் கதவின்பக்கம் பேதுருவானவர் பார்வை சென்றது. கதவு நன்கு சாத்தப்பட்டிருந்தது. சுண்டுவிரலால் தட்டிப்பார்த்துக் கொண்டார். கொத்துச்சாவி இடுப்பில் தொங்கியது. ஆள் நடையைக் கட்டிவிட்டார்.

சுவக்கிம்! அவருக்கு மோட்சவாசல்கதவு அடைபட்டுவிட்டது. "கபாடம் தானே திறக்கும் கைத்தலமாகிய தாமரையே" என்று புகழேந்தி பாடினாரே, அதுபோல் 'அடுத்த கதவு" தானே திறந்தது,

நான் மீண்டும் பூலோகத்துக்கு வந்துகொண்டிருந்தேன். ஏழைகளையும் அநாதைகளையும் துன்பப்படுவோரையும் தேடிக்கொண்டு — அங்கு தானே சுவர்க்கவாசல் இருக்கின்றது.

## விமர்சனம்:

(ஐயா யோசவ்)

# திருப்பாடுகளின் காட்சி

இறைமகன் உலக இரட்சகர் யேசுநாதசுவாமியின் மனித அவதாரத்தின் நோக்கம அவர் மனுக்குலத்தின் மீட்புக்காக சிலுவையில் அந்தரத்தே நின்று தமது உயிரைப் போக்கிக் கொள்வதில் நிறைவுகொள்கிறது. மனித நெஞ்சங்களின் கொடூரத்தனங்கள்,கொலைபாதக வஞ்சின எண்ணங்கள் அத்தனைக்கும் 'கழுவாய்' தேடிக் கொள்வதன்பொருட்டாக'யேசு' என்ற புனித இதயம் தன்னைப் பொறுமையின் எல்லைக் கோடுகளுக்கு அப்பாலும் தாழ்த்திச் செல்கிறது இந்த உண்மையின் உறதிப்பாடான தெளிவை மிகவும் ஆழமாக நுணுகி நற்செய்தி ஏடுகளை அணுகினல் தெளியலாம். இதற்குச் சிறிது கற்பனை நோக்குக்கொண்டு நிகழ்ச்சிகளை உருவகித்து உணர்பவர்கள் நற்செய்தி ஏடுகளின் சம்பவங்களை இலகுவில் இனங்காணமுடியும். ஆங்காங்கே பரவலாகச் சிதறிக்கிடக்கும் வாய்மை வெளிப்பாடுகளை நிரைப்படுத்தி இறைமகன் கிறிஸ்துவின் பாடுகளாக **'யாழ் ஆசனக்கோவில் இளைஞர் கழகத்தினர்'** நடித்துக் காண்பித்தனர். ஏறக்குறைய 60-க்கும் மேற்பட்ட நடிகர்களின் கூட்டு முயற்சியில் உருவான இந்தப் பாடுகளின் காட்சி சென்ற திங்கள் 27ஆம் 28ஆம் நாட்களில் நடைபெற்றது. 6000யிரத்திலிருந்து 8000யிரம் மக்கள்வரை திரண்டிருந்து கண்டுகளித்த மேற்படி காட்சியினை கடைசிநாளான 28ஆம் நாள்தான் பார்க்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது.

அரண்மனை மண்டபங்கள், ஜெத்சமெனி தோட்டம், நடைபாதைஓரங்கள், மந்திரிசபை மண்டபங்கள் பிலாத்துவின் மேல்மாடி மண்டபம் ஏரோதின் அரண்மனை ஆகிய இத்தியாதி அலங்கார அமைப்புகளுடன் காட்சி அரங்கம் பலே 'ஜோராக' பொலிவுபெற்றுத் திகழ்ந்தது. நிகழ்ச்சிகள் தாமதமின்றி தொடர்ந்தது. காட்சிகளின் கோர்வையைப் பற்றிப்பிடித்துப் பார்வையாளர்கள் புரிந்துகொள்ள இலகுவாயிருந்தது. இதற்கு மிகவும் ஒத்திழைப்பாக ஒலிபெருக்கி அமைந்திருந்தது. போதிய மின்சார விளக்குகள், 'போகஸ்' கருவிகள் பயன்படுத்தாமை காரணமாக நடிகர்களின் முகபாவனைகள், துல்லியமான உணர்வுகளின் வெளிப்பாடுகள் பார்வையாளர்களுக்கு தெரியாது மறைந்துவிட்டது. மேலும் பார்வையாளர்களின் ரசனை உணர்வை குறிப்பிடக் கீழ்வரும் சம்பவங்கள் குறிப்பிடக் கூடியவை.

யேசுநாதர்சுவாமியை கற்ணில் கட்டி அடிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எங்கும் நிசப்தம்—போர் வீரர்களின் ஆணவச் சிரிப்பும், மமதைப் பேச்சும், மாற்றார் மனதையும் கூசவைக்கும் 'நையாண்டி' வார்த்தைகளும் யேசுநாதர் சுவாமிகளைக் குறித்து பேசப்படுகின்றன. அதுமட்டுமா? வார்க்கசைகொண்டு அடித்தும் சதை கிழிப்புண்ணச் செய்து, மூங்கில்தடிகொடுத்துபரிகசித்து ஏளனம் செய்தார்களே பாவிகள். இரத்தம் பெருக்கெடுத்து வடிய அனலில் பட்ட புழுப் போல துவண்டு துடித்தாரே யேசுமகான் அப்போது—

'அப்பா......' என்ற முனகலுடன் கூடிய அழுகைக்குரல் பக்கத்தில் எங்கோ ஈனமாக ஒலித்தது.

'அப்பா பாவம்பா...... இரத்தம் வருகுதம்பா' பெண்பிள்ளையொன்றின் நைந்து உருகிய மழலை இதயத்தின் வெளிப்பாடு, தொடர்ந்து முனகல். நான் பிள்ளையின் தந்தையைக் கவனித்தேன். காரணம் சொல்லி மகளின் அழுகையை நிறுத்தமுடியாமல் தவிக்கும் அந்தத் தந்தையைப் பார்க்க மிகவும் பரிதாபகரமாகவிருந்தது. பிள்ளையை அணைத்து முத்தமழை பொழிந்தார். முடியவில்லை. 'அப்பா......பாவம்பா' அழுகை தொடர்ந்தது. அடுத்தகணம் அந்தப் புத்திசாலித் தந்தை அவ்விடத்தைவிட்டு 'ஐஸ்பழம்' விற்பவரை நோக்கி நகர்வதை அவதானிக்கமுடிந்தது. நிச்சயமாக அவர்கள் பிற சமயத்தவர்கள்தான் என்பதில் எவ்வித சந்தேகமும் வேண்டியதில்லை.

இதேபோன்று நெஞ்சங்களை ஈர்த்து இழுத்துச் சோகரசத்தைச் சிந்தவைத்த காட்சி ஒன்றினையும் குறிப்பிடுவேன் யேசுநாதர்சுவாமி சிலுவையில்தொங்குகிறார். பிறர் பாவங்களை மன்னித்துத் தமது இன்னுயிரான 'ஜீவனை'ப் பிதாவின் கையில் சேர்ப்பிக்கும் வேளையில், "என் பிதாவே ... என் பிதாவே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்பதாகக் கேவிக் கேவி அழுது, உடலின் நாளங்கள், நரம்புகளை ஒன்றிணைத்து' உயிர்'விடும் காட்சியில் நான் அழுதேன். இல்லை, என்னை அறியாமலே எனதுகண்கள் இரண்டுசொட்டு நீரைப் பனித்தன. அருகில் இருந்த மற்றவர்களை நோட்டம் விட்டேன். பலர் வாய்விட்டு அரற்றினர்—அழுதனர். சிலர் கைகளைக்குவித்துச் செபித்தனர். நடைபெறுவது காட்சிஎன்பதை மறந்து, இறைவனுடன் அந்தக் கணத்தை ஒன்றிணைத்துக் கலந்தனர். எங்கும் அமைதி.

ஓ! இந்தக் காட்சியில் யேசுநாதராக நடித்தவரின் நடிப்பு அபாரம். அவர் சிலுவையில் மரித்ததுபோன்று அசைவற்று நின்றநிலை, பாடுபட்ட உருவத்தின் அப்பட்டமான சாயலைப் பெற்றிருந்தது என்றுசொன்னல் மிகையல்ல. 'அன்னஸ்' என்தான் வலிந்து ஆட்டத்தை வரவழைத்து நடிப்பை எடுத்துக் கொண்டாரோ தெரியவில்லை. அவரின் பேச்சு பார்வையாளர்களுக்கு 'ஹாஸ்ய' விருந்தாக அமைந்தது. 'ஹைப்பாஸ்' வேடத்தில் நடித்தவர் மிகநன்றாகப் பாத்திரத்தை உணர்ந்து நடித்தார். பாராட்டப் படவேண்டிய நடிப்பு. (வளரும்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம்ஆு சித்திரை மாதம் 15-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. [illegible] 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org